சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :03.04.2025
வா.சா.1 – சாந்தி W/o பாலு
O.S No. 241/2023:
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் பிளஸ்2 வரை படித்துள்ளேன் வேலைக்கு செல்லவில்லை. வீட்டில் தான் இருக்கிறேன். நானும், பிரதிவாதி அழகுதேவி என்பவரும் ஒரே ஊரைச்சார்ந்தவர்கள். ஆனால் உறவினர்கள் அல்ல. பிரதிவாதி வேறு சமூகத்தை சார்ந்தவர் அதனால் எங்கள் வீட்டு விசேஷத்திற்கு எல்லாம் அவர்களை அழைப்பதில்லை. பிரதிவாதி சுகாதார துறையில் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். பிரதிவாதி கிராமநூலகத்தில் வேலை செய்து வந்தார். பிரதிவாதி தற்போது ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். பிரதிவாதி திருமணமாகாதவர் என்பது தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதியின் தம்பி மூக்கன் என்ற பொன்னடியான் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கடன் கொடுத்த விபரம் பற்றி என் கணவருக்கு தான் நேரடியாக தெரியும் என்றால் சரியல்ல எனக்கும் தெரியும். என் கணவருக்கு மேற்படி வழக்கு தொடர்பான விபரங்கள் தெரியும் என்ற விபரத்தை வழக்குரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. எனக்கு தெரியவில்லை. நான் அவசர தேவை என்பதற்காக இடத்தை பிரதிவாதியிடம் கேட்டேனா என்றால் இல்லை. அழகுதேவி அவருக்கு அவசர தேவை இருந்ததால் விவசாய நிலத்தை விற்பனைக்கு கேட்டார். நாங்களும் வாங்குவதாக தெரிவித்தோம். வழக்கு சொத்து நஞ்சை நிலம் ஆகும். வழக்கு சொத்தின் விஸ்தீரணம் 37 செண்டு ஆகும். ஒரு செண்டு எவ்வளவு விலை என்பதை என்னுடைய வழக்குரையிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளேன். வழக்குசொத்தினுடைய அளவீடுகள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. சொத்தை ஒருவாரததிற்கு முன்பாக கிரையம்

பேசினோம். ஒருவாரம் சென்று 05.07.2021 அன்று நிலத்தை விற்பனைக்காக கிரைய ஒப்பந்தம் போட்டுக்கொண்டோம். அன்றைய தினமே 1 லட்சம் ரூபாய் முன்பணமும் கொடுதெதுவிட்டேன். ஒருவாரத்திற்கு முன்பு கிரையம் பேசப்பட்டது என்ற விபரத்தை வழக்குரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி 1 லட்சம் ரூபாயை எங்கு வைத்து யார் முன்னிலையில் கொடுத்தேன் என்ற விபரம் பற்றி வழக்குரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ தெரிவித்துள்ளேனா என்றால் சொல்லியிருக்கிறேன். நான் கொடுத்த அனைத்தும் 500 ரூபாய் தாள்கள் மொத்தம் 200 தாள்கள் ஆகும். 1 லட்சம் ரூபாய் பணம் பரிமாற்றம் செய்யும் போது வங்கி மூலம் தான் பணபரிமாற்றம் செய்யவேண்டும் என்ற சட்டம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு IOB, மேலூர் கிளையில் சேமிப்பு கணக்கு உள்ளது. எனக்கு வழக்கிற்கு முன்பிருந்தே மேற்படி வங்கியில் வங்கி கணக்கு உள்ளது. தமிழரசன் என்பவர் என்னுடைய மகன் ஆவார். என் மகன் தமிழரசன் என்பவருக்கு தெற்குதெரு SBI கிளையில் சேமிப்பு கணக்கு உள்ளது என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாக பிரதிவாதி என் மகன்தமிழரசன் வங்கிகணக்கில் 25000 ரூபாய் பணம் செலுத்திய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வட்டி உடனடியாக கட்டவேண்டும் என்று நான் நிர்பந்தம் செய்ததால் பிரதிவாதி தமிழரசன் கணக்கிற்கு 29.03.2023 அன்று SBI தெற்கு தெரு வங்கிகணக்கில் பணத்தை வைப்பீடு செய்தார் என்றால் தெரியாது. வழக்கு சொத்து எங்கு இருக்கிறது என்று தெரியாது. நான் பார்த்ததில்லை. பாக்கி கிரைய தொகையை யார் முன்னிலையில்எப்போது கேட்டேன் என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு விட்டு கேட்டேன். அதற்கு முன்பு நேரடியாக பண்தகை செலுத்துமாறு பிரதிவாதியிடம் கேட்டேனா என்றால் இல்லை. பிரதிவாதியின் தம்பி மகள் திருமணத்திற்காக என்னிடம் கடனாக 1,11,000ரூபாய் கடனாக என்னிடம் கேட்டார் என்றால் அதுபற்றி தெரியாது.

அதற்கு மாதா மாதம் வட்டி செலுத்தி வந்தார்கள் என்றால் எதுவுமே அவர் கொடுத்ததில்லை. கொரோனா காலகட்டம் என்பதால் தொடர்ந்து பிரதிவாதியால் வட்டி செலுத்தமுடியவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து அதிகமதிப்புடைய சொத்து என்பதால் சொத்தை கேங்டடு வழக்கு தாக்கல் செய்து விட்டேன் என்றால் சரியல்ல. வழக்கானது ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மாற்றுபரிகரம் கேட்கவில்லை. வழக்கு சொத்தை பிரிரதவாதி கிரையம் பேசி ஆவணம் ஏற்படுத்தவில்லை என்றும், கடனிற்காக தான் ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றும் அவர் பணத்தை திருப்பி செலுத்த தயாராக இருக்கிறார் என்றால் எங்கள் சொத்து தான் வேண்டும். அதனால் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.04.03 17:38:37 +0530

Sub Judge
Melur